**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 153** **நாள்:05.10.2018**

**மகாத்மா காந்தியடிகளின் 150வது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னைப் பள்ளிகளுக்கு இடையே நடைபெற்ற கட்டுரை மற்றும் ஓவியப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.**

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 2014ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தினத்தில் தூய்மை இந்தியா திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு கடந்த 4 ஆண்டுகளாக இத்திட்டம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் மகாத்மா காந்தியடிகளின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சென்னைப் பள்ளிகளுக்கு இடையே நெகிழி ஒழிப்பில் (பிளாஸ்டிக்) மாணவர்களின் பங்கு குறித்த கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் ஏராளமான மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சி.ஐ.டி. நகர் சென்னை மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாணவ, மாணவியர்களுக்கு நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டை தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டு, அனைத்து மாணவ, மாணவியர்களும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த மாட்டோம் என்ற விழிப்புணர்வு உறுதிமொழியினையும் எடுத்துக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், கல்வி அலுவலர் திரு.ஆர்.கோவிந்தசாமி, திடக்கழிவு மேலாண்மை துறை செயற்பொறியாளர் திருமதி டி.விஜஷீலா மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**